## "ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிளவும் அம்பாரை மாவட்ட முஸ்லிம்களின் அரசியல் இயங்குநிலையும் : ஒரு விமர்சனப்பகுப்பாய்வு"


**Supervisor**
*Mr. SM.Aliff,*
*Senior Lecturer,*
*Faculty of Arts and Culture*

**Researcher**
*Miss. SL. Roseena,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts and Culture*


ஜனநாயக முறையில் இன்றியமையாத ஒன்றாக அரசியல் கட்சிகள் காணவருகின்றன. அந்த வகையில் பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி காணப்பட் டுவருகிறது. முஸ்லிம்கள் ஆரம்பகாலம் முதல் அரசியலில் ஈடுபட்டு வந்தாலும் எதிர் நோக் கிய சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் தமக்கென ஒரு தனித்துவமான கட்சி தேவை என்பதை உணர்ந்து 1988இல் பதிவு செய்யப்பட்ட கட்சியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கினர். உருவாக்கிய காலம் முதல் 2000ம் ஆண்டு வரை இக்கட்சியின் தலைவராக எம்.எச்.எம். அஸ்ரப் அவர்களே காணப்பட்டார். அத்துடன் இக்கட்சியானது. 2000ம் ஆண்டு வரை அதாவது தலைவர் அஸ்ரப் மரணிக்கும்வரை இக்கட்சி பிளவுபடாமல் திகழ்ந்ததால் முஸ்லிம்களின் அரசியல் இயங்குநிலை ஒரே தன்மையுடையதாக காணப்பட்டது. அரசியல் இயங்கு நிலை என்பது என்னவென்றால் ஒரு கட்சியின் ஆதரவாளர்கள் அக்கட்சி எவ்வழி செல்கிறதோ அவ்வழியே தமது அரசியல் இயங்குநிலையையும் கொண்டிருக்கின்றனர். கட்சியின் கொள்கை, நோக்கம், செயற்பாடு என்பன மாறுகின்ற போது அக்கட்சி சார்ந்தவர்களும் தமது அரசியல் இயங்கை மாற்றிக் கொள்கின்றனர். சிலவேளை மக்கள் (ஆதரவாளர்கள்) தாம் ஆதரித்த கட்சி பிளவுபடும் போது ஆதரவாளர்களும் அதற்கேற்றால்போல் செயற்படுவார்கள் என்று இல்லை. ஒட்டுமொத்தமாக நோக்கும் போது அரசியல் இயங்குநிலை என்பது கட்சி சார்பாக மக்களின் செயற்படு தன்மை எனக் கூறலாம். இது காலத்துக்குக் காலம் மாறுபடும் தன்மை கொண்டதும் எனலாம்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபட முன்னர் ஒரே இயங்குநிலை கொண்டமையால் பெற்றவையும் சாதித்தவையும் பல என்றே கூறலாம். இதற்கெல்லாம் காரணம் ஒற்றுமையே எனலாம். ஆனால் தலைவர் அஸ்ரப் மரணித்ததன் பின்னர் இணைத் தலைமைத்துவம் சிறிது காலம் பேணப்பட்டாலும் பிற்பட்ட காலத்தில் ஏற்பட்ட தலைமைத்துவ முரண்பாடு, மற்றும் கட்சி உட்பூசல், குளறுபடிகள் ஒற்றுமையின்மை போன்ற பல காரணங்களினால் கட்சியானது பிளவுபட தொடங்கியது. இதற்கு ஆதாரமாக பிளவு பட்டு உருவான தேசிய காங்கிரஸ், நுஆ, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், கட்சிகளை எடுத்துகொள்ளலாம். இவ்வாறான கட்சிகள் மற்றும் ஏனைய கட்சியினை ஆதரிக்கும் தன்மை என்பது அஸ்ரப் காலத்தில் இருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனால் முஸ்லிம்களின் ஒரே நிலையில் இருந்த அரசியல் இயங்குநிலையானது மாறுபட தொடங்கியது. இதற்கு மேற்குறிப்பிட்ட வெவ்வேறு கட்சியின் உருவாக்கமும் மற்றும் ஏனைய கட்சியினை ஆதரிக்கும் தன்மையையும் எடுத்துகாட்டலாம்.

இவ்வாய்வின் முக்கிய பிரச்சினையானது, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபட்டு வருவதால் அம்பாரை மாவட்ட முஸ்லிம்களின் அரசியல்

இயங்குநிலை மாற்றமுற்று வருகிறது என்பதும் இதனால் எற்படும் சவால்களும் பிரச்சினைகளையும் அறிதல் என்பதே ஆகும்.

இதேபோல் இவ்வாய்வின் முக்கிய நோக்கங்களாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோற்றம் செயற்பாடு மற்றும் பிளவின் போக்கு என்பவற்றை கண்டறிவதுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிளவின் முன்னர் காணப்பட்ட முஸ்லிம்களின் அரசியல் இயங்குநிலை மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிளவின் பின்னர் காணப்படவருகின்ற அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் அரசியல் இயங்குநிலையினையும் பகுப்பாய்வு ரீதியாக அறிதல். அதேபோல் அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் அரசியல் இயங்குநிலை மாற்றமுற்று வருவதால் எழுந்துள்ள நடை முறை சவால்களையும் சிக்கல்களினையும் கண்டறிதல் என்ற 03 முக்கிய நோக்கங்களும் இவ்வாய்வுக்காக எடுத்து கொள்ளப்பட்டன.

மேலும் மேற்குறிப்பிட்ட பிரச்சினை மற்றும் நோக்கங்களை கண்டறிய ஆய்வு முறையியலாக 1ம் மற்றும் 2ம் நிலை தரவுகள் பயன்படுத்தப்பட்டன. அதாவது 1ம் நிலை தரவுகளாக ஆய்வுப் பிரதேசத்தில் நேர்காணல்கள் மற்றும் 02 இலக்குக் குழு கலந்துரையாடலும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள 4 தேர்தல் தொகுதிகளிலும் உள்ள முஸ்லிம்களிற்கு எழுமாறாக 100 வினாக்கொத்தும் வழங்கப்பட்டு தகவலும் தரவுகளும் பெறப்பட்டன. அதேபோல் 2ம் நிலை தரவு களாக பத்திரிகை, சஞ்சிகை, அறிக்கைகள் இணையதளம் புள்ளிவிபர தகவல்கள் என்பவை பயன்படுத்தப்பட்டதுடன் இவை மூலம் பெறப்பட்ட தகவல்களும் தரவுகளும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியானது பிளவு பட்டு வருவதால் அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் பல சவால்களை எதிர் நோக்குகின்றனர். குறிப்பாக அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் ஒற்றுமையின்மை இதனால் ஏற்படும் வன்முறை, காணிப்பிரச்சினை, அபிவிருத்தியின்மை மற்றும் வேலைவாய்ப்பில் பாராபட்சம், முஸ்லிம் பெரும்பான்மை மாவட்டமான அம்பாறை அழித்தொழிக்கும் செயற்பாட்டின் மும்முரம், முஸ்லிம்வாக்காளர்களின் நம்பிக்கையிழப்பு செயற்பாடு, முஸ்லிம் எழுச்சியினை ஏற்படுத்தமுடியாமையினால் ஏற்பட்டுள்ள முஸ்லிம் விரோத செயற்பாடுகள் அதிகரித்தள்ளமை, முஸ்லிம் அரசியல் கோரிக்கைகள் பலவீனமடைந்து வருகின்றமை, முஸ்லிம் உரிமை செயற்பாடுகள் மறுக்கப்படுகின்றமை, சுயாட்சி சுய நிர்ணயத்தில் ஏற்படுத்தும் தாக்கம், சிறுபான்மை என்ற வகையில் ஏற்படுத்தும் பாதிப்பு (திவிநெகும) போன்ற சவால்களை எதிர் நேர்க்குகின்றனர் இதனால் இவர்கள் தமது அரசியல் இயங்குநிலையினை மாற்றுகின்றனர்.

எனவே இவ்வாய்வானது அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் அரசியல் இயங்குநிலை என்பது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியானது பிளவுபட முன்னர் ஒரே இயங்குநிலை கொண்டது என்றும் 2000ம் ஆண்டுக்கு பின்னர் பிளவுபட தொடங்கியதால் அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் அரசியல் இயங்குநிலை மாற்றமுற்று வருகிறது. ஆனாலும் இது முற்றுமுழுதான அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் அரசியல் நிலைப்பாடு அல்ல. ஏனெனில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கான ஆதரவு அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் இயங்குநிலை மத்தியில் இன்றும் இருந்து கொண்டே வருகிறது.